| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **123/2008** |
| தேதி | : | **09.04.2026.** |
| பெயர் | : | **கலைமணி த/பெ ஏழுமலை** |

**வா.த.சா.1 (PW1) அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை:**

1) நான் இந்த வழக்கில் வாதியின் முகவர் ஆவேன். இந்த வழக்கை நடத்துவதற்கு எனது தம்பி வெங்கடேசன் என்பவர் எனக்கு பொது அதிகாரம் அளித்துள்ளார். அது 2005 ம் ஆண்டு வழங்கப்பட்டது. மேற்சொன்ன பொது அதிகாரப்பத்திரம் பதிவு செய்யப்பட்டது. தற்போது வரை எனது முதல்வர் உயிருடன் தான் உள்ளார். எனக்கு கொடுக்கப்பட்ட பொது அதிகாரப்பத்திரத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பொது அதிகாரப்பத்திரத்தை நான் இவ்வழக்கில் ஆவணமாக குறியீடு செய்யப்படவில்லை. அந்த பொது அதிகாரப்பத்திரத்தின் அசலும், நகலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட பொது அதிகாரப்பத்திரம் சம்பந்தபட்ட சங்கதிகள் முறையே ஆவண எண், தேதிகள் மற்றும் இதர குறிப்புகள் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முறையான பொது அதிகாரப்பத்திரத்தை தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த வழக்கில் மூலக்கூறுகள் மற்றும் இதர விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் அசல் வழக்கு எண் 341/1997 வழக்கு ஒன்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவள்ளூர் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு தற்போது அசல் வழக்கு எண் 546/2008 ஆக நடைபெற்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

3) அசல் வழக்கு எண் 546/2008 ல் குறியீடு செய்யப்பட்ட வாதசாஆ 2 ல் உள்ள பட்டியல் சொத்து தான் இந்த வழக்கின் A பட்டியல் சொத்து என்றால் சரிதான். இந்த வழக்கின் A பட்டியல் சொத்தின் புல எண் 1626/1i2 ல் 31 சென்ட் நிலம் ஆகும். புல எண் 1626/1i4 ல் 41 சென்ட் நிலம் ஆகும். புல எண் 1626/1i5 ல் 34 சென்ட் நிலம் ஆகும். ஆக மொத்தம் 1 ஏக்கர் 6 சென்ட் நிலம் ஆகும். இந்த வழக்கின் B பட்டியல் சொத்தானது புல எண் 1626/1i2 ல் பிளாட் எண் 153 ல் விஸ்தீரணம் 2400 சதுர அடி நிலம் ஆகும். அசல் வழக்கு எண் 546/2008 வழக்கானது இந்த வழக்கின் 2ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பை எதிர்த்து சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம் மேல் முறையீட்டு எண் 38/2009 ஆக நான் தாக்கல் செய்தேன். அந்த வழக்கும் 2ம் பிரதிவாதிக்கு சாதகமாமக தீர்ப்பானது. நான் மேல் முறையீட்டு தீர்ப்பை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் SA No. 1413/2011 ல் முறையீடு செய்தேன். அந்த இரண்டாவது மேல் முறையீட்டின்

தீர்ப்பானது 27.04.2021 ம் தேதி தீர்ப்பிற்காக ஒத்திவைக்கப்பட்டு 11.05.2021 ம் தேதி எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

4) அசல் வழக்கு எண் 546/2008 ஆனது மொத்த விஸ்தீரணமானது ஒரு ஏக்கர் 6 சென்ட் நிலத்திற்கு போடப்பட்டது. எனவே அந்த தீர்ப்பானது இந்த வழக்கின் பட்டியல் சொத்தையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் B பட்டியல் சொத்தான புல எண் மேற்சொன்ன அசல் வழக்கு 546/2008 ல் இருப்பதால் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கின் தீர்ப்புகளை இந்நீதிமன்றம் ஆணையிட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். இந்த வழக்கானது மேற்சொன்ன தீர்ப்பின் அடிப்படையில் Res-judicata என்ற முறை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

5) மேற்சொன்ன SA No. 1413/2011 ல் தீர்ப்பிற்கு எதிராக நான் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். ஆனால் அதை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன். வழக்கறிஞரின் அறிவுறுத்தலின் பேரில் நான் அந்த மனுவை திரும்ப பெற்றுக்கொண்டேன். எனவே மேற்சொன்ன காரணங்களுக்காக எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதசாஆ 2 நான் தாக்கல் செய்த கிரயப்பத்திரம் மேற்சொன்ன புல எண்களுக்கு கீழ் வருவதால் அதன் அடிப்படையில் எனக்கு தாவா சொத்தின் மீது எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

6) வாதசாஆ 3 தாவா சொத்திற்கான பட்டா அதவும் உரிய அதிகாரிகளால் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். ஆனால் நான் அந்த உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு செய்துள்ளேன். மேற்படி மேல் முறையீட்டில் திருப்பெரும்புதூர் வருவாய் கோட்டாச்சியர் பட்டா ரத்தானதை உறுதி செய்தார். அதன் மீது மேல் முறையீடு செய்ய அறிவுறுத்தியுள்ளார். அதன் அடிப்படையில் நான் மேல் முறையீடு செய்யப்போகிறேன். எனவே மேற்சொன்ன காரணங்களுக்காக வாதசாஆ 3 பட்டா செல்லாது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல. வாதசாஆ 3 பட்டா ரத்து செய்யப்பட்ட காரணத்திற்காக வாதசாஆ 4 , 5 சிட்டா, அடங்கல் ஆகியவையும் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. எனவே வாதசாஆ 6 வரி ரசீது செல்லாது என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கிற்கு பொது அதிகாரம் வழங்கப்படவில்லை என்றாலும், எனவே எனது சாட்சியம் செல்லாது என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை**.**

**சாட்சி கையொப்பம் Sd/. கலைமணி.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.